www.Padasalai.Net www.TrbTnpsc.com

V10T

**விருதுநகர் மாவட்டம்**

**மூன்றாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2025**

-----

**வகுப்பு 10**

காலஅளவு: 3.00 மணிநேரம் **தமிழ்** மதிப்பெண்கள்: 100

**பகுதி -I**

**1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.** **15×1=15**

1) அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ..........

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்

இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

2) பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க

அ) கொண்டல் - 1. மேற்கு

ஆ) கோடை - 2.. தெற்கு

இ) வாடை - 3. கிழக்கு

ஈ) தென்றல் - 4. வடக்கு

அ) 1 2 3 4 ஆ) 3 1 4 2 இ) 4 3 2 1 ஈ) 3 4 1 2

3) இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ........... இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர்.

அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்

இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

4) ‘உனதருளே பார்ப்பன் அடியேனே’ - யாரிடம் யார் கூறியது?

அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்

அ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

5) ‘மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்’ - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே .........

அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்

அ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

6) இருவர் உரையாடுவது போன்ற ஓசை ........

அ) அகவலோசை ஆ) செப்பலோசை இ) துள்ளலோசை ஈ) தூங்கலோசை

7) <u>‘காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்’</u> நிலத்துக்கு நல்ல உரங்கள் இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது .........

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்

இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

8) ‘கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்’ என்று ........... பெருமைப்படுகிறார்

அ) பாரதி ஆ) பாரதிதாசன் இ) குமரகுருபரர் ஈ) இளங்கோவடிகள்

9) வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

10) ‘அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்’ என்று விருந்தோம்பல் பற்றிக் கூறும் இலக்கியம் ...........

அ) அகநானூறு ஆ) நற்றிணை இ) புறநானூறு ஈ) குறுந்தொகை

11) ‘காமராசர் நகர் எங்கே இருக்கிறது?’ இந்த வழியாகச் செல்லுங்கள்.’ - என்று விடையளிப்பது ........... விடை

அ) நேர்விடை ஆ) ஏவல் விடை இ) மறைவிடை ஈ) சுட்டுவிடை

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக**

‘செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்’

12) இப்பாடலின் ஆசிரியர் ..........

அ) தமிழழகனார் ஆ) நப்பூதனார்

இ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஈ) பெருங்கௌசிகனார்

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



13) 'எந்தமிழ்நா' - என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........

அ) எந் + தமிழ் + நா ஆ) எம் + தமிழ் + நா இ) எந்த + தமிழ் + நாஈ) எ + தமிழ் + நா

14) பாடலில் இடம்பெறும் அடிஎதுகை ..........

அ) செந்தமிழே - எந்தமிழ்நா ஆ) விந்தை - எடுத்தே

இ) எடுத்தே - நெடுநிலைப்பும் ஈ) புகழும் - புகழுரையும்

15) இப்பாடல் இடம்பெறும் நூல் ..........

அ) பரிபாடல் ஆ) மலைபடுகடாம் இ) முல்லைப்பாட்டு ஈ) கனிச்சாறு

## பகுதி -II (மதிப்பெண்கள் - 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 4×2=8**

**வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்**

16) 'நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு வரம் மரம் - மரங்களை
வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' - இது போன்று உலகக்
காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக

விடைக்களுக்கேற்ற வினாக்கள் அமைக்க

அ) தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை

ஆ) 'இந்தியாவை விட்டு வெள்ளையனே வெளியேறு' என்ற தீர்மானத்தைப் பம்பாயில் கூடிய அகில இந்திய பேராயக்கட்சி ஒரு மனதாக நிறைவேற்றியது

18) கலைஞரின் கதை வசனங்களில் சமூகக் கருத்துகளைப் பேசிய படங்கள் யாவை?

19) வசன கவிதை - குறிப்பு வரைக

20) 'வாழ்வில் தலைக்கனம்,' 'தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர்ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?

21) 'அது' என முடியும் திருக்குறளை எழுதுக

Padasalai.Net

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5×2=10**

22) இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? இதோ .......... இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா?

மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக

23) **மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக**

அ) அள்ளி இறைத்தல் ஆ) கண்ணும் கருத்தும்

24) நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு. - இத்தொடரை இரு தொடர்களாக்குக

25) **இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க**

அ) மடு - மாடு ஆ) சிலை - சீலை

26) **பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறிப்பிடுக**

பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் - மபொசி

27) பகுபத உறுப்பிலக்கணம் தருக. அறியேன்

28) **கலைச்சொல் அறிக**

அ) Play wright ஆ) Vowel

## பகுதி - III (மதிப்பெண்கள் - 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2×3=6**

29) உயிராக நான் பல பெயர்களில் நான், நான்கு திசைகளிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான் ............ முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

பற்றிப் பேசுகிறது. இவ்வாறு 'நீர்' தன்னைப் பற்றிப் பேசினால் .......... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

30) தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக

31) **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

ஜப்பானில் சாப்ட்வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே! பெப்பர். இது உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ. வீட்டுக்கு, வணிகத்துக்கும், படிப்புக்கும் என்று மூன்று வகை ரோபோக்கள் கிடைக்கின்றன. இவை மனிதனின் முகபாவனைகளிலிருந்து உணர்வுகளைப் புரிந்துகொண்டு அதற்கேற்பச் செயல்படுகின்றன. பெப்பரை வரவேற்பாளராகவும் பணியாளராகவும் வீடுகளிலும் வணிக நிறுவனங்களிலும் உணவு விடுதிகளிலும் பயன்படுத்துகிறார்கள்.

அ) 'பெப்பர்' என்ற இயந்திர மனிதனை எங்கெல்லாம் பயன்படுத்துகிறார்கள்?

ஆ) பெப்பர் என்பது யாது?

இ) பெப்பர் எவ்வாறு செயல்படுகின்றன?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2×3=6**
**வினா எண் 34க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்**

32) 'மாளாத காதல் நோயாளன் போல் என்னும் தொடரில் உள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக

33) வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

34) **அடிபிறழாமல் எழுதுக**

அ) 'அருளைப் ........... ' எனத் தொடங்கும் 'நீதிவெண்பா' பாடல்.

**(அல்லது)**

ஆ) மாற்றம் எனது ......... எனத் தொடங்கும் 'காலக்கணிதம்' பாடல்

Padasalai.Net

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2×3=6**

35) தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளை எழுதுக

36) 'வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு' - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

37) 'மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை' - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.

## பகுதி - IV (மதிப்பெண்கள் -25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5×5=25**

38) அ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலக்குச் செவிசாய்ந்த நிகழ்வை நயத்துடன் எழுதுக

**(அல்லது)**

ஆ) 'பொருள்செயல் வகை' குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக

39) அ) 'மாநில அளவில் நடைபெற்ற' 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக

**(அல்லது)**

ஆ) மருந்தகம் ஒன்றிலிருந்து உங்கள் தாத்தா வாங்கி வந்த மருந்தின் பயன்பாட்டுத் தேதி முடிவடைந்ததை அறிந்த நீங்கள், அந்த மருந்தகத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு சுகாதாரத்துறை ஆய்வாளர் அவர்களுக்கு முறையீட்டுக் கடிதம் ஒன்றை எழுதுக.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



41) அன்பழகன் என்பவரின்மகள் சுமதி மதுரையில் உள்ள தெற்கு மாசி வீதி, கதவு எண் 110 இல் வசித்து வருகிறார். அவர் பத்தாம் வகுப்பு படித்து முடித்துவிட்டு, கூடைப்பந்து விளையாட்டில் பயிற்சிபெற விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராகச் சேர்கிறார். தேர்வர் தம்மை சுமதியாகக் கருதி விண்ணப்பத்தை நிரப்புக

42) அ) நமது பாரம்பரிய உணவு குறித்த மருத்துவர் கு.சிவராமனின் கருத்திற்குச் சமூக அக்கறையுடனான உங்களின் பதில் என்னவாக இருக்கும்?

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்கவும்

Kalaignar Karunanidhi is known for his contributions to Tamil literature. His contributions cover a wide range: poems, letters, screenplays, novels, biographies, historical novels, stage-plays, dialogues and movie songs. He has written Kuraloviam for Thirukural, Tholkaappiya Poonga, Poombukar, as well as many poems, essays and books. Apart from literature, Karunanidhi has also contributed to the Tamil language through art and architecture. Like the Kuraloviyam, in which Kalaignar wrote about Thirukkural, through the construction of Valluvar Kottam he gave an architectural presence to Thiruvalluvar, in Chennai. At Kanyakumari, Karunanidhi constructed a 133-foot-high statue of Thiruvalluvar in honour of the scholar.

Padasalai.Net

## பகுதி - V (மதிப்பெண்கள் -24)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **3×8=24**

43) அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக

(அல்லது)

ஆ) ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க

44) அ) அன்னமய்யா என்னும் பெயருக்கே' அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் 'கோபல்லபுரத்து மக்கள்' கதைப்பகுதி கொண்டு விவரி

(அல்லது)

ஆ) 'மங்கையராயப் பிறப்பதற்குக் என்ற துணைப்பாடத்தின் வாயிலாக முன்னேற்றம் அடைந்தவர்களில் எவையேனும் நால்வரின் வாழ்வியல் நிகழ்வுகளை எழுதுக

45) அ) உங்கள் பகுதியியல் நடைபெற்ற கலைத்திருவிழாவிற்குச் சென்ற வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக

(அல்லது)

ஆ) பள்ளி வளாகத்தில் நடைபெற்ற 'மரம் நடுவிழாவுக்கு' வந்திருந்த சிறப்பு விருந்தினருக்கும் பெற்றோருக்கும் பள்ளியின் 'பசுமைப்பாதுகாப்பு படை' சார்பாக நன்றியுரை எழுதுக.

-------